# வடக்கு-கிழக்கு போருக்கு 2500 கோடி ரூபா ஒதுக்க அரசு திட்டம்!

(மொனறாகல)
''வடக்கு-கிழக்கில் யுத்தச் செலவுகளுக்காக எதிர்வரும் வரவு-செலவுத்திட்டத்தில் 2 ஆயிரத்து 500 கோடி ரூபா ஒதுக்கவேண்டியுள்ளது.''
இவ்வாறு பிரதம மந்திரியும், நிதியமைச்சருமான டி. பி. விஜயதுங்க தெரிவித்தார்.
[4ம் பக்கம் பார்க்க]

பொதுசன நூலகம் உடனுதவும் 13-8-1991

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 28 இதழ்: 183
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 13-8-1991

## வெற்றிலைக்கேணி கடற்படைத்தளம்?

(கொழும்பு)
வெற்றிலைக்கேணி பகுதியை ஒரு கடற்படைத்தளமென இலங்கை வானொலி நேற்றுத் தெரிவித்தது.
ஆனையிறவு முகாமுக்குப் படைகள் வெற்றிலைக்கேணி
(4-ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் அமைதி அரசு அறிவிப்பு

(கொழும்பு)
ஆனையிறவில் நேற்று அமைதி நிலவியதாகவும், விடுதலைப் புலிகள் இராணுவத்திற்கெதிராக எந்தவித தாக்குதலையும் மேற்கொள்ளவில்லை எனவும் அரசாங்கம் நேற்றுத்
[2-ம் பக்கம் பார்க்க]

# இனப் பிரச்னைக்கு அரசு உடனடி தீர்வு காணாவிடில் நிலைமை விசுவரூபமெடுக்கும்!

(கொழும்பு)
இனப் பிரச்னைக்கு உடனடித் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யாதவிடத்து, விடுதலைப் புலிகளின் பலம் அதிகரித்துப் பின்னர் எப்பொழுதும் பேச்சுவர்த்தை நடத்தமுடியாத அளவுக்கு இலங்கையின் இனப் பிரச்னை விசுவரூபம் எடுக்கும் என்று சில முக்கிய அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஆனையிறவுப் பகுதியில் இடம்பெற்ற சண்டையின் போது, விடுதலைப் புலிகள் தமது பலத்தை நிரூபித்துள்ளனர்.

அரசு இவ்விடயத்தில் முயற்சி எதுவும் செய்யாமல் இருக்குமானால் புலிகளின் பலம் மேலும் வளர்ச்சியடைவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

கெரில்லாப் போர் நடத்தி வந்த புலிகள், ஆனையிறவுப் போரில் மரபுவழிரீதியில் மிகத் திறமையாகப் போரிட்டது அவர்களின் இராணுவ ரீதியான வளர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது.

10 ஆயிரம் படையினருடனும், முப்படைகளின் உதவியுடனும் அரச படைகள் இம்முகாமை மீட்பதற்காக 5 மைல்களைக் கடப்பதற்கு 24 நாட்கள் சென்றது குறிப்பிடத்தக்கது.

இப்போரில் தங்கள் இராணுவப் பலத்தை நிரூபித்துள்ள புலிகள், வருங்காலங்
(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவம் சுட்டு 2 தமிழ்ப் பெண்கள் பலி

[மட்டகளப்பு]
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிரான் என்னுமிடத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் இரு தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டு சுட்டுக்கொலை செய்
[2-ம் பக்கம் பார்க்க]

## இந்தியாவுடன் சுமுக உறவுகள் தேவை -ஜனாதிபதி

[கொழும்பு]
எமது அயல் நாடான இந்தியாவுடன் சிறப்பான சுமுகமான நல்லுறவுகளை தொடர்ந்தும் வைத்திருக்கவே நாம் எப்போதும் விரும்புகிறோம்.

கொழும்பில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 10-வது ஆண்டு மாநாட்டில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி பிரேமதாஸா இவ்
(2ம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் 500 புலிகள் சிறையில்

(சென்னை)
தமிழ் நாட்டில் 500 விடுதலைப் புலிகள் சிறைவைக்கப் பட்டுள்ளதாக இந்திய பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

மேலும் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை கட்டுபடுத்துவதற்கென 750 ஏ.கே.47 தன்னியக்க ரைபிள்களையும் அதற்கான ஒரு லட்சம் ரவைகளையும், விடுதலைப் புலிகளை அடக்கும் விசேட கமாண்டோப்
(4-ம் பக்கம் பார்க்க]

## பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்: 430 விண்ணப்பங்கள் நேற்று ஏற்றுக்கொள்ளப்பட்டன

[சித்தன்கேணி]
யாழ். அரசாங்க செயலக பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்துக்கு சுமார் 430 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பு அத்தாட்சிப்
(4-ம் பக்கம் பார்க்க)

## ஜெர்மன் பத்திரிகையாளர் வாகனம் மீது துப்பாக்கி சூடு!

(யாழ்ப்பாணம்)
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ஜெர்மன் பத்திரிகையாளர் ஒருவரின் வாகனம் மீது தாண்டிக்குளத்தில் வைத்து படையினர் சரமாரியாக துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்.

நேற்று முன் தினம் காலை
(4ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு முகாமில் ஆறுவது புதிய படையணி

(கொழும்பு)
ஆனையிறவு முகாமில் தற்போது 6வது சக்தி வாய்ந்த படையணி நிறுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

கஜபாகு, விஜயபாகு, சிங்க, கெமுனு, தரையணிகளைச்சேர்ந்தவர்களைக் கொண்ட இந்த 6வது சக்திவாய்ந்த அணி ஆனையிறவு முகாமை நோக்கி முன்னேறிய படையணியில் ஒன்றாகும்.
[4-ம் பக்கம் பார்க்க]

## அடுத்த கட்ட நிவாரணத்துக்கு அரிசி வழங்கப்படும்

(சித்தன்கேணி)
அடுத்த கட்ட நிவாரணத்துக்கு அரிசி வழங்கப்படவுள்ளது. 'அ', 'இ', 'உ' அட்டைகளுக்கான நிவாரணத்தின்போது குறிப்பிட்டளவு அரிசியும் வழங்கப்படவுள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள
(4ம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதல் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)
பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலினால் இருவர் காயமடைந்தனர்.
(2ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில் 1,45,000 குடும்பங்களுக்கும் இலவச நிவாரணம் வழங்கவேண்டும்! - அரசுக்கு மகஜர்

[யாழ்ப்பாணம்]
''யாழ். மாவட்டத்திலுள்ள ஒருலட்சத்து 45 ஆயிரம் குடும்பங்களுக்கும் தொடர்ந்து இலவச நிவாரணம் வழங்கப்படவேண்டும்.''

இவ்வாறு நேற்று யாழ். செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். சண்முகநாதன் தலைமையில் கூடிய உதவி அரசாங்க அதிபர்கள் மகாநாட்டில் அரசாங்கத்திடம் கோருவதென தீர்மானிக்கப்பட்டது.

இம்மாதம் 1ம் திகதியுடன்
(4-ம் பக்கம் பார்க்க)

## அரசின் முடிவுக்கு வன்மையான கண்டனம்

(யாழ்ப்பாணம்)
அகதி முகாம்களில் இல்லாதவர்களுக்கான நிவாரணத்தை நிறுத்தும் அரசின் முடிவை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று வலிகாமம் வடக்குப் புனர்வாழ்
(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

சவுக்கு விதை தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம் (எ-1493)

### தவறிவிட்டது

ஆறுமுகம் குகதாஸ் பொன்னுவலை வீதி, காரைநகர் என்ற விலாசதாரருடைய இல. 673121900V அடையாள அட்டையும் 320 ரூபா பணமும் 11-08-91 மாலை 6-45மணியளவில் நல்லூர். கந்தசுவாமி கோவில் பின் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஆ. குகதாஸ், 24, உடையார் ஒழுங்கை, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்தசன்மானம் வழங்கப்படும். (சி-5101)

S.K.சின்னத்தம்பி, சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி என்பவர் துவிச்சக்கர வண்டியில் யாழ்ப்பாணம் நோக்கி வரும் வழியில் றெயில்வே கடவைக்கும் சந்திக்கும் இடையில் சைக்கில் சிறு விபத்துக்குள்ளானதால் காது கோளாதவர்கள் பாவிக்கும் செவிப்புலன் கருவி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் [சி-5140]

### சோதிடம்

குழந்தைகளுக்கு அதிர்ஷ்ட எண்களில் அழகான பெயர் சூட்ட, ஜாதகம் எழுத, திருமணப் பொருத்தம் பார்க்க, உங்கள் பெயர்களை அதிர்ஷ்டகரமாக்கித்தர, எதிர்காலம் பற்றி சிந்திக்கும் நேரத்தில் சந்தித்துப் பாருங்கள். V A. சிவராசா, 152 B, அரசடி றோட், கந்தர்மடம். [சி-5103]

## குமண இன்று புறப்படும்

(யாழ்ப்பாணம்)

நோயாளர்களையும், தபால் பொதிகளையும் ஏற்றிக்கொண்டு 'குமண' கப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து திருமலைக்கு புறப்பட்டு பின்பு அங்கிருந்து இக்கப்பல் கொழும்புக்குச் செல்லுமென்று கூறப்படுகின்றது (வி)

## காரைநகர் ஒய்வூதியர்க்கு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் காரைநகரைச் சேர்ந்த ஒய்வூதியக்காரர்களது ஒய்வூதியத்தை ரொக்கப் பணமாக வழங்கியுள்ளனர்.

காரைநகரில் இருந்து இடம் பெயர்ந்துள்ள இவர்கள் பணமின்றிக் கஷ்டப்படுவதை உணர்ந்த இச்சங்கத்தினர் கடந்த ஜூன் மாதத்திற்குரிய ஒய்வூதியத்தை ரொக்கப்பணமாக வழங்கி உதவிபுரிந்துள்ளனர். (139-137)

# தொலைக்கல்வி பயிற்சிநெறி: விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(நாவற்குழி)

தொலைக்கல்விமூலம் ஆசிரிய பயிற்சி பெறவிரும்பும் நிரந்தர ஆசிரியர்களிடமிருந்துவிண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்பும் ஆசிரியர்கள் இம்மாதம் 27ந் திகதி முதல் 31ம் திகதிவரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள யாழ் மாவட்ட தொலைக்கல்விப்பிரிவில் நடைபெறவுள்ள நேர் முகப்பரீட்சையில் தங்களது விண்ணப்பத்துடன் நேரில் வரும்படி யாழ். மாவட்ட தொலைக்கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ம. செ. அலெக்ஸாந்தர் தெரிவித்துள்ளார்.

பயிற்றப்படாத நிரந்தஆசிரியர்கள் ஆரம்ப கல்வி பயிற்சிநெறி, கணித பயிற்சிநெறி, விஞ்ஞான பயிற்சிநெறி ஆகியவற்றிற்கு விண்ணப்பிக்கலாம் எனவும் நேர்முகப் பரீட்சைக்கு வரும்போது தொலைக்கல்வி பயிற்சிக்கான விண்ணப்பப் படிவம்.

முதல் நியமனக்கடிதம், பிறப்பு சான்றிதழ் அல்லது தேசிய அடையாள அட்டை எதுவித ஒழுக்காற்று நடவடிக்கையும் இல்லை என்ற அதிபரின் சிபார்சுக்கடிதம் என்பனவும் கொண்டுவர வேண்டும் எனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்கள் தேவையானோர் பிரதிவெள்ளிக்கிழமைதோறும் காலை 9-00 மணிமுதல் 1-00 மணிவரை யாழ் இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட தொலைக்கல் விப்பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். (107)

# பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் சீருடை அணியாத ஊழியர்களுக்கு எச்சரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தி சாலைக்குத் திடீர் விஜயத்தினை மேற்கொண்டு வந்த யாழ். சுகாதார சேவைகள் அத்தியட்சகர் திரு. என் கனகசபையிடம் சீருடையின்றி கடமையிலிருந்த ஊழியர்கள் வகையாகச்சிக்கிக் கொண்டனர்.

சுகாதார சேவை அத்தியட்சகர் சீருடையின்றி கடமையிலிருந்த ஊழியர்களைக்கடுமையாக எச்சரித்தார்.

வைத்தியசாலையின் சகல நடவடிக்கைகளையும் அவர் கண்காணித்தார். வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவருபவர்களையும் அவர் பார்வையிட்டார்.

## தவில் மேதை சின்னராசாவிற்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அமரரான தவில்மேதை இணுவையூர் என். ஆர் சின்னராசாவின் 41-ம் நாள் நினைவஞ்சலிக் கூட்டம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நாளை புதன்கிழமை பிற்பகல் 2-30 மணிக்குநடைபெறவிருக்கிறது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா திருவுருவப்படத்தைத் திறந்துவைத்து இந் நிகழ்ச்சிக்குத் தலைமைவகிப்பார்.

இரங்கலுரையை பேராசிரியர்கள், கலைஞர்கள். அறிஞர்கள் ஆகியோர் நிகழ்த்துவார்கள். இறுதி நிகழ்ச்சியாக ஆத்மாலய நாதார்ப்பணம் இடம்பெறும். இதில் நாதஸ்வர மேதைகள் அளவெட்டி என். கே. பத்மநாதன், சாவகச்சேரி எம் பி. பஞ்சாபிகேசன், அமரர் சின்னராசாவின் புதல்வர்கள் ரவீந்திரன், சுதாகரன் தவில் கச்சேரியை நிகழ்த்துவார்கள். (153)

## மாதாந்த உதவிப்பணம்

(கொழும்புத்துறை)

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு கடந்த ஜூன் மாதத்திற்குரிய மாதாந்த பொதுசன உதவிப்பணம் தற்பொழுது சகல தபால் அலுவலகங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது

அரசினர் மாதாந்த பொதுசன உதவிப்பணம் இன்று வரை பெறுதவர்கள் தத்தமது பகுதித்தபால் அலுவலங்களில் நேரில் சென்று பெற்றுக்கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (154)

### ஆனையிறவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தது.

கடந்த மாதம் 10-ம் திகதி விடுதலைப் புலிகள் ஆனையிறவு முகாம் மீது மேற்கொண்ட தாக்குதலையடுத்து நேற்றைய தினம் மட்டும் விடுதலைப் புலிகள் எந்தவித தாக்குதலையும் மேற்கொள்ளவில்லை என்று அரசு மேலும் தெரிவித்தது.

### ஷெல் தாக்குதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சசி [கோண்டாவில்]. முருகேசு [மல்லாகம்] ஆகியோரே இச் ஷெல் தாக்குதலினால் காயமடைந்தவர்களாவர்.

நேற்று நண்பகல் ஒரு மணியளவில் கட்டுவனை நோக்கி ஆறுதடவைகள் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன

### இந்தியாவுடன்

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் இனப்பிரச்னை தீர்விற்கு கட்சி வேறுபாடின்றி அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். நாட்டில் கொழுந்து விட்டெரியும் இப்பிரச்னையை உடனடியாக தீர்க்க வேண்டும்

உள்நாட்டு பிரச்னை தீர்வுக்கென நாடாளுமன்ற தெரிவுக்குழு தெரிவு செய்யப்பட்டது இனப்பிரச்னை தீர்வுக்கான சிறந்த அறிகுறியாகும் என்றார்.

## பணியாளர் இடமாற்றம்

(பருத்தித்துறை)

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலை மூடப்பட்டமையினால் அங்கு பணிபுரிந்த சில ஊழியர்கள் அம்பன் அரசினர் வைத்தியசாலையிலும், வரணி அரசினர் வைத்தியசாலையிலும் பணியாற்றிவருகின்றனர்.

தற்போது அம்பன் அரசினர் வைத்தியசாலை மாத்திரம் வடமராட்சி கிழக்கில் இயங்கி வருகின்றது. இதனால் பெருந்தொகையான நோயாளிகள் இங்குசிகிச்சை பெறவருகின்றனர். பெருந்தொகையான நோயாளர்கள் இங்குவருவதனால் இவ்வைத்தியசாலையில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய நிலையும் ஏற்பட்டுள்ளது. [52]

### இராணுவம்

(-1ம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டனர்

கடந்த 7ம் திகதி கிரான், கும்புறுமுலை இராணுவமுகாம்களிலிருந்து வெளியே வந்த படையினரால் மேற்படி பெண்கள் கொலைசெய்யப்பட்டது டன்கிரானில் தமிழ் பொதுமகன் ஒருவரின் வீடும் தீமூட்டி எரிக்கப்பட்டது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் பல இடங்களில் தமிழ் மக்கள் மீதான படையினரின் தாக்குதல் அதிகரித்துவருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

படையினர் முகாம்களை விட்டு வெளியே வருவதும் தமிழ் மக்கள் துன்புத்தப்படுவதும் தொடர்கதையாக இருப்பதால் வீடுகளைவிட்டு வெளியே வர அஞ்சிய நிலையில் அங்குள்ள தமிழர் வாழ்கிறார்கள்.

# நல்லூர்க் கந்தன் உற்சவ நாட்களில்

(கொழும்புத்துறை)

நல்லூர் ஸ்ரீ கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவம் 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நல்லைக் கந்தன் ஆலய திருவிழாக் காலங்களில் தினசரி பினவரும் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது.

தினமும் காலை 5-00மணிக்கு வீதிப் பஜனையும் காலை 9-00 மணிக்கு சமய தீட்சையும், பி ப 2.00 மணிக்கு சமயச்சொற்பொழிவும் பி. ப 3.00 மணிக்கு புராணப்படிப்பும் மாலை 5.30 மணிக்கு கதாப்பிரசங்கமும் நடாத்த ஏற்பாடுகள் செய்துள்ளதாக ஆதீன குரு மகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ தவத் திரு. சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் தெரிவித்துள்ளார். (154)

## பொருட்கள் பறிமுதல்

(பூநகரி)

வவுனியாவில் இருந்து வட பகுதியை நோக்கிவரும் பயணிகள் தமது தேவைக்காக எடுத்துவரும் சில பொருட்களை வவுனியா தடைமுகாமில் இருக்கும் இராணுவத்தினர் "இரண்டுக்குமேல் கொண்டு போக முடியாது" எனக் கூறி மேலதிகமாக கொண்டு வரும் பொருட்களை இராணுவம் பறிமுதல் செய்கின்றதாக அங்கிருந்துவரும் சைக்கிள் பயணிகள் தெரிவித்தனர். (23)

## மா கூடுதலாக வழங்கப்படுகிறது

[சித்தன்கேணி]

சங்கானை ப நோ. கூ. சங்கத்தினால் தற்போது வழங்கப்படும் உலர்உணவு விநியோகத்தின்போது மா கூடுதலாக வழங்கப்படுகின்றது.

தற்போது நடைமுறையில் உள்ள சகலருக்குமான 10ம் கட்ட நிவாரணத்துக்கும் இடம் பெயர்ந்தவர்களுக்கான 17ம் கட்ட நிவாரணத்துக்கும் சங்கானை ப. நோ. கூ. சங்கத்தினால் கூடுதலாக மா வழங்கப்படுகின்றது. அரிசி வழங்கப்படவில்லை. லக்ஸ்பிறே. ஹைலண்ட் ஆகிய பால்மாவும் வழங்கப்படுகின்றது [137]

## உணவுப் பொருட்கள்

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்திற்கான உணவுப் பொருள்கள் குமண கப்பலில் பருத்தித்துறைக்கு வந்துள்ளது.

260 மெற்றிக் தொன் மா, 225 மெற்றிக் தொன் அரிசி, 80 மெற்றிக் தொன் சீனி, 7 கேஸ் லக்ஸ்பிறே, 256 பாக்கிட் டாமில்க் ஆகியன வந்துள்ளன.

இப்பொருட்களை யாழ். மாவட்டத்திலிருந்து கிளிநொச்சி மாவட்டத்துக்கு பூநகரி ஊடாக ஏற்றி களஞ்சியப்படுத்த பூநகரி ப. நே கூ. சங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. (23)

### ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பலகலைக்கழக மருத்துவபீட பரீட்சை காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் மாதம் 15-ம் திகதி மேற்படிப்பரீட்சைநடைபெறுமென முன்னர் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது (வி)

வாருங்கள்! வாருங்கள்!!

30 வீத கழிவு விலையில் மரத்தளபாடங்கள் வாங்க நாடுங்கள்!

சஞ்சீவி,

மரத்தளபாட விற்பனை நிலையம்,
இல: 31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்

(ஏ-1492)

## ஆபத்து கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

"பலாலி ஆசிரியர் கலாசாலையில் 1989 ஆம் ஆண்டு இரண்டாம் வருடப் பயிற்சி ஆசிரியராய் இருந்து அவர்களுக்குரிய ஆபத்துக் கொடுப்பனவை இதுவரை பெறாதோர் அதற்குரிய ஆவணங்களுடன் உடனடியாகக் கலாசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

## மக்கள் அஞ்சலி

(நாவற்குழி)

விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்திற்குமிடையில் ஏற்பட்ட நேரடி மோதலின் போது வீரமரணத்தைதழுவிக் கொண்ட போராளியான 'ஜெனு'வின் [சிறீதங்கரராசா நவநீதன் மீசாலை வடக்கு) புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மண்டபத்தில் வைக்கப்பட்டு அஞ்சலிக்கூட்டமும் இடம்பெற்றது.

பின்னர் இந்த மாவீரனின் புகழுடல் பாண்ட் வாத்திய சகிதம் கொடிகாமம் மாவீரர் மயானம் வரை ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு அங்கு தீயுடன் சங்கமமாக்கப்பட்டது. (107)

### உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கு இணிங்கித்தோட்ட முத்துக்குமாரசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் 16-ம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது.

8-ம் நாள் வேட்டைத் திருவிழாவும், 9-ம் நாள் சப்பரத் திருவிழாவும், 10-ம்நாள் தேர் தீர்த்த திருவிழா நடைபெறும் 11-ம் நாள் பூங்காவனத்திருவிழா நடைபெற்று திருவிழா பூர்த்தி அடையும்.

# தமிழீழ காவல்துறையின் வளர்ச்சிக்கு மக்களின் கருத்துக்கள், அபிப்பிராயங்கள் வரவேற்கப்படும்

## காவல்துறை பொறுப்பாளர் திரு. நடேசன் பேட்டி

''தமிழீழ காவல்துறையானது சட்டம்; ஒழுங்கைப் பேணவும் மக்களின் நலனுக்காகவும் மேம்பாட்டிற்காகவும் செயல்படுவதுடன் தமிழீழ தேசிய விடுதலைப்போராட்டத்திற்கும் தனது பங்களிப்பைச் செய்யும்'' இவ்வாறு தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு நடேசன் 'ஈழநாடு'வுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேட்டியளிக்கையில் தெரிவித்ததாவது: ''இதுவரை காலமும் தமிழீழ மக்கள் சுமார் ஐந்நூறு வருடங்களுக்கு மேலாக அந்நிய ஆட்சியாளர்களின் நிர்வாகத்தின் கீழ் ஆளப்பட்டுவந்தனர். ஆனால் இன்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் குறிப்பாக தலைவர் பிரபாகரனின் தலைமையின் கீழ் வழி நடத்தப்படும் எமது விடுதலைப் போராட்டமானது, அந்நிய காவல்துறையினரையும், அவர்கள் நிர்வாகத்தையும் தமிழீழ பிரதேசத்தில் முற்றுமுழுதாக செயல் இழக்கச் செய்துவிட்டது. இதன் பிரதிபலிப்பே தமிழீழத்தில் தமிழ் மக்கள் தம்மைத்தாமே ஆளும் உரிமையைப் பெற்றுவருவதும்,

### காவல்துறை "விடுதலைப் போராட்டத்திற்கு பங்களிப்பைச் செய்யும்"

இக்காவல்துறை உருவாக்கப்படுவதும் முக்கிய வரலாற்று நிகழ்வாகக் கருதப்படவேண்டும்.

அவர் மேலும் தெரிவிக்கையில ''சிங்கள காவல்துறை இதுவரைகாலமும் தமிழ்ப்பிரதேசத்தில் ஓர் அன்னிய ஆட்சியின் அடக்குமுறைச்சின்னமாகவே இருந்தது ஆனால் தமிழீழக்காவல்துறை உருவாக்கமானது எமதுவிடுதலைப் போரட்டத்தின் ஓர் சின்னமாகும்

தமிழீழப் பிரதேசத்தில் கடந்த காலங்களில் சிங்களக் காவல்துறையின் செயல்பாடானது தமிழீழமக்களை அடக்கிஒடுக்கியதுடன் திட்டமிட்டஇன அழிப்பு, ஒழிப்பு போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவந்தது. ஆனால்தமிழீழக்காவல் துறையானது எமது மக்களின் சுதந்திர உணர்வுகளுக்கும், மனித உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கும். எமது பிரதேசத்தில் தவறுதலாகயாரும் குற்றம் புரிந்தாலும் கூட அவர்கள் மீது மனிதாபிமான முறையில் அணுகி அவர்களின் எதிர்கால வாழ்க்கை வளம்பட அமைவதற்கான புரட்சிகரமான வேலைத் திட்டங்களில் ஈடுபடுத்துவதுடன் அவர்களை எமதுதேசிய விடுதலைப்போராட்டத்துடன் இணைப்பதற்கான வழிவகைகளையும் செய்யும்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இக்காவல் துறையானது எமது தலைவர் பிரபாகரனின் நேரடிக் கட்டுப்பாட்டிலும் கண்காணிப்பிலும் செயல்படும்'' என்றார்.

எனவே இக்காவல் துறையினர் செயல்படுத்தப்பட்டு தமிழீழப்பிரதேசத்தில் காவல் துறை நிலையங்கள் அமைக்கப்பட்டு செயல்படத் தொடங்கும் என்றார்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் இக்காவல் துறையின் வளர்ச்சிக்காக எமது மக்களிடம் இருந்து ஆக்கபூர்வமான கருத்துக்களும் அபிப்பிராயங்களும் வரவேற்கப்படும், மக்களால் தெரிவிக்கப்படும் கருத்துக்களும், அபிப்பிராயங்களும் நுணுக்கமாகப் பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் உடனுக்குடன் எடுக்கப்படும்'' எனவும் அவர் தெரிவித்தார். (51)

நமது நிருபர் எஸ். சுந்தரலிங்கம்

# காயம் ஆறும் முன்பே மீண்டும் களம் புகுகின்றேம்

(கிளிநொச்சி)

''காயம்ஆறுமுன்புகளத்தில் நின்று போராடுகிறேம். வீரமும், தீரமும், இலட்சியத்தில் உறுதியுமே இதற்கு காரணமாகும் என்று கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையில் கிளிநொச்சி மாவட்ட கலை, பண்பாட்டுப்பிரிவு பொறுப்பாளர் திரு செழியன் குறிப்பிட்டார்.

''நிழல்'' நிர்வாகப் பொறுப்பாளர் சிவா மாஸ்டர் தலைமையில் இடம்பெற்ற இக்கருத்தரங்கில் மாவட்ட கலை பண்பாட்டுப் பொறுப்பாளர் திரு. செழியன் மேலும்பேசுகையில்:

இன்றைய போரில் சிங்கள வயோதிபர்கள்கூட ஆயுதம் ஏந்திபோராடுகிறார்கள். அவர்களது ஒரே கனவு தமிழீழத்தைக் கைப்பற்றி தமிழரை அடிமைகொள்ளச்செய்வது தான்.

நிலைமை இவ்வாறு இருக்க இங்கு என்னவென்றால் ஒவ்வொருநாளும் பத்திரிகைகளில் என்ன வருகிறது என்று பார்ப்பதிலும் வீணே இருந்து காலத்தைப்போக்குவதிலுமே எம்மவர்கள் நேரத்தை செலவிடுகின்றனர்.

இந்த நிலைமாறி சிங்கள இனவெறி அரசுப்படைகளை தமிழீழமண்ணிலிருந்துவிரட்டி அடிக்க எல்லோரும் ஆயுதப் பயிற்சிபெற்று ஆயுதமேந்திப் போராடவேண்டும்.

மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இலக்கியன் பிரதேசப் பொறுப்பாளர் திரு. தோமஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர். (83)

# இராசி பலன்

13 - 08 - 1991

செவ்வாய்க்கிழமை

தமிழுக்கு ஆடி - 28

சதுர்த்தி பி. இ. 2-22 வரை.
உத்தரம் மாலை 6-22 வரை.
இராகுகாலம் மாலை 3-05 முதல் 4-35 வரை.
சுபநேரம் காலை 10-35முதல் 12-05 வரை.
அமிர்தசித்தயோகம்
தெல்லிப்பழை துர்க்காதேவி கொடி.

மேடம்; மனத்தைரியம், வாக்குவன்மை. செல்வந்தர் நட்பு.

இடபம்: தொழில்பாதிப்பு. குடும்பக்கவலை. பயனற்ற பிரயாசம்.

மிதுனம்; கடும் வாதம். தொழில் பிணக்கு. தேசசஞ்சாரம

கடகம்: மனக்களிப்பு, சுபகாரிய செலவு. அதிகாரிகள் உதவி

சிங்கம்: தவறான போக்கு, மனக்குமுறல், வேண்டாத தொல்லை.

கன்னி: தொலில் லாபம், புத்திரர் பெருமை, தனவரவு

துலாம்: கடன்சுமை. அந்நியவாசம். அகங்காரம்.

விருச்சிகம்: இடப்பெயர்வு. தொழில் மகிழ்ச்சி. வேலைப்பளு.

தனுசு: முரண்பாடு. அறிபர் நேசம், குடும்பக்கஷ்டம்.

மகரம்: முதியோர்பிணக்கு பதட்டம், மறைமுகதொல்லை.

கும்பம்; கருத்து முரண்பாடு, அதிகாரிகள் சினம், கோபமிகுதி

மீனம்: காரிய சித்தி. அறிஞர் பாராட்டு, பணலாபம்.

- ஜோஸ்யர்

# கைதடியில் இன்று போர்க்காலக் கருத்தரங்கு

(நாவற்குழி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் போர்க்காலக்கருத்தரங்கு இன்று 13ம் திகதி செவ்வாய்கிழமை இரவு 8-00 மணிக்குகைதடி குருசாமி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரமுகரான திரு. புதுவை இரத்தினதுரையும், தென்மராட்சி மகளிர் முன்னணிப் பொறுப்பாளரான செல்வி சங்கரியும் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளார்கள்.

கருத்தரங்கு முடிவில் தென்மராட்சி விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் வழங்கும். ''அம்மா நான் போராடப் போகிறேன்'' என்னும் வில்லிசையும் இடம் பெறும்.

இன்று கைதடி நுணுவில் அ. த. க பாடசாலையிலும் போர்க்காலக் கருத்தரங்கு இடம் பெறும். இக்கருத்தரங்கில் திரு. ஆஞ்சநேயர், செல்வி மாலினி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்வுள்ளனர்.

கருத்தரங்கு முடிவில் தென்மராட்சிகலை, பண்பாட்டுக் கழகம் வழங்கும் ''அப்பு ஆனையிறவிற்கு போகிறார்'' நாடகம் இடம் பெறும். (107)

# அடுத்த தவணை முதல் கட்டாய மாலை நேர வகுப்பு

[கொழும்பு]

மூன்றும் தவணைக்காக அடுத்த மாதம் 2-ம் திகதி பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும்போது மாலை நேர வகுப்புகள் கட்டாயமாக நடாத்தப்படவுள்ளதாக கல்வி உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது

ஆண்டு 6 முதல் ஆண்டு 10வரை மாலைநேர வகுப்புகளில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் கற்பிக்கப்படும் ஆண்டு 11க்கான மேலதிக வகுப்புக்கள் நடாத்துவது குறித்து பாடசாலை அதிபர்களே தீர்மானிப்பார்கள்.

மேற்படி மாலைநேர வகுப்புகளில் திறமைச்சித்திபெறுவோருக்கு ஆயிரம் புலமைப் பரிசில் வழங்கவும் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. (சி)

# விவியன் ரிச்சர்ட்ஸ் கிரிக்கெட் உலகிலிருந்து ஓய்வுபெறுகிறார்

(லண்டன்)

உலகின் பிரபல கிரிக்கெட் வீரரும் மே. இந்திய அணித் தலைவருமான விவியன் ரிச்சர்ட் கிரிக்கெட் உலகிலிருந்து ஓய்வு பெறுகிறார். லண்டன் ஓவலில் நடைபெறும் தமது இறுதி டெஸ்ட் இனிங்ஸில் மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடி மே. இந்திய அணியின் இனிங்ஸ் தோல்வியை தவிர்த்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான 5வது இறுதி டெஸ்ட் போட்டியில் நான்காவது நாளில் ரிச்சர்ட் அடித்த 60 ஓட்டங்கள் மே. இந்திய அணியை இனிங்ஸ் தோல்வியிலிருந்து மீட்க பெரிதும் கைகொடுத்தது. இவருடன் ஆடிய றிச்சி ரிச்சட்சன் 108 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்காதுவிளார்.

மிகத் திறமையாக துடுப்பெடுத்தாடி 60 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தபின் ரிச்சர்ட் அரங்கிற்கு திரும்பிய போது அரங்கிலிருந்த சுமார் 20,000 ரசிகர்களும் எழுந்து நின்று பலத்த கரவொலி எழுப்பி கடைசி முறையாக தங்கள் பாராட்டை சிறப்பாக தெரிவித்தனர்.

தமது 18 ஆண்டு கால கிரிக்கெட் டெஸ்ட் வரலாற்றில் விவியன் ரிச்சர்ட் 121 டெஸ்ட்டில் விளையாடியுள்ளார். அடித்துக்குவித்த ஓட்டங்கள் 8,540. அடித்த சதங்கள் 24. ரிச்சர்ட்டின் ஓட்ட விகிதத்தின் சராசரி 50.23 இவர் எடுத்த மிக மிக அதிகமான ஓட்டம் 291. இந்த ஓட்டத்தை இவர் 15 ஆண்டுகளுக்கு முன் லண்டன் ஓவல் மைதானத்திலே பெற்றார்.

ரிச்சர்ட்டை விட அதிகமாக ஓட்டங்களை பெற்றவர்கள் இந்திய வீரர் சுனில் கவஸ்காரும், ஆஸ்திரேலிய அணித்தலைவர் அலன் போடரும் தான். (சி)

# 48 தொழுநோயாளர்கள் புதிதாக கண்டுபிடிப்பு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்தில் கடந்த 5 மாதகாலமாகநடைபெற்றதொழுநோய் ஆய்வின் போது 48 புதிய தொழுநோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர்.

கிராம ரீதியாக தொழுநோயாளர்களைஆரம்பநிலையில் கண்டு பிடிப்பதற்காக குறிப்பிட்டபகுதிகளில்தொழுநோய் ஆய்வு சுகாதார பகுதியினரால் தொண்டர்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அண்மையில் நடாத்தப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் சுழிபுரம் மேற்கு காட்டுப்புலம் கிராமத்தில் மட்டும் 15 பேருக்கு தொழுநோய்க்கான ஆரம்ப அறிகுறிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தொழுநோய் தடுப்பு அதிகாரி திரு. எம். குணரத்தினம் தெரிவித்தார்

இதனைத்தொடர்ந்து தொல்புரம் அரசினர் மத்திய மருந்துச்சாலையில் நடைபெற்று வரும் தொழு நோயாளருக்கான சிகிச்சை நிலையம் (கிளினிக்) காட்டுப் புலத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாகவும், காட்டுப்புலம் சனசமூக நிலையத்தில் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது திங்கட்கிழமையன்று காலை 7மணி தொடக்கம் காலை 9மணிவரை இந்த நோயாளர்கள் அங்கு வந்து சிகிச்சை பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

மருதனுமடம் சந்தியில் மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டியில் வந்த மாணவன் ஒருவரை மோதியதில் அவர் படுகாயங்களுக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாயை சேர்ந்த கதிர்காமநாதன் தவச்செல்வன் (16 வயது) என்பவரே காயப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (56)

# பருத்தித்துறை கொத்தணி பாடசாலை ஆசிரியருக்கு தொலைக்கல்வி பயிற்சிநெறி

[பருத்தித்துறை]

வடமராட்சிக் கோட்டக் கல்வி அலுவலகப் பகுதிக்குட்பட்ட எட்டுக்கொத்தணிப் பாடசாலைப் பிரிவுகளிலும் பணியாற்றும் 175 பயிலுநர் ஆசிரியர்களுக்குமான தொலைக்கல்விப் பயிற்சி நெறியினை வடமராட்சி கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை வட இந்து மகளிர் கல்லூரியிலும், கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியிலும்ஆரம்பித்துவைத்தார். இவ் ஆரம்ப வைபவங்களில் கல்வி அதிகாரிகளான திரு. வி. கே. ஏகாம்பரநாதன், திரு. ரேய் காந்தராஜ், வட இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி குமாரசாமி, விக்னேஸ்வரா கல்லூரி அதிபர் திரு. எஸ். செல்வராஜா ஆகியோரும் கலந்துகொண்டனர். (58)

யாழ். மாவட்டத்தில்

# பம்பாய் வெங்காய செய்கை பெருமளவில் வீழ்ச்சி

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இம்முறை பம்பாய் வெங்காயச் செய்கை பெருமளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது. மண்ணெண்ணை விலை அதிகரிப்பு, தட்டுப்பாடு காரணமாகத் தொடர்ச்சியான நீர்ப்பாசனத்திற்குக் கஷ்டம் ஏற்பட்டதன் காரணமாகப் பல விவசாயிகள் இம்முறை பம்பாய் வெங்காயச் செய்கையைக் கைவிட்டுள்ளனர்.

நவாலி, வட்டுக்கோட்டை அராலி போன்ற இடங்களில் பம்பாய் வெங்காயம் கடந்த காலங்களில் அமோக விளைச்சல் செய்யப்பட்டிருந்தது. விவசாயிகள் பலரும் தமது தோட்டங்களில் மட்டுமல்ல, குத்தகையாக நிலத்தை பெற்றும் கூட முப்பது முப்பத்தைந்து என்ற பரப்புகளில் பம்பாய் வெங்காயம் பயிரிட்டு லட்சக்கணக்கில் லாபமடைந்தனர். ஆனால் இவ்வருடம மண்ணெண்ணை தட்டுப்பாட்டால் பம்பாய் வெங்காயச் செய்கையை கைவிட்டுவிட்டனர். தமது குடும்பத்துக்குத் தேவையான அளவிலேயே சாமை, குருக்கன், பயறு, கௌப்பி, வெங்காயம் போன்ற பயிர்களை அவர்கள் இவ்வருடம் பயிரிட்டுள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது. (109)

## ஜெர்மன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாண்டிக்குளம் தடைமுகாமில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. எனினும் இந்த பத்திரிகையாளரும், வாகனசாரதியும் மயிரிழையில் உயிர் தப்பினர்.

தாண்டிக்குளம் தடைமுகாமருகில் வந்த இவர்களின் வாகனம் அங்கு நிறுத்தாமல் சில மீற்றர் தூரம் முன்நோக்கிச்சென்றதையடுத்து இந்த வாகனம் மீது சரமாரியாக துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டது. இதையடுத்து வாகனம் நிறுத்தப்பட்டது.

உடனடியாக வாகனத்தை சூழ்ந்த படையினர் பத்திரிகையாளரையும், சாரதியையும் கீழே இறக்கினர்களாம் இந்த நேரத்தில் வடபகுதி நோக்கி வந்த பயணிகள் அல்லோலகல்லோலப்பட்டு நிலத்தில் வீழ்ந்துகிடந்து ஒருவாறு சமாளித்துக் கொண்டனராம். (சி)

## யாழ். மாவட்டத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்டத்துக்கு வழங்கப்பட்டுவந்த இலவச நிவாரணத்தை நிறுத்துவது என்ற அரசாங்கத்தின் தீர்மானத்தை எதிர்த்து மேற்கண்ட தீர்மானத்தின் அடிப்படையில் மகஜர் ஒன்று அரசாங்கத்துக்கு அனுப்பப்படவுள்ளது.

இம்மாதம் 1-ம் திகதி தொடக்கம் அகதிகள் முகாம்களில் நிரந்தரமாக தங்கியிருப்பவர்களுக்கு மட்டுமே இலவச நிவாரணம் வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

ஆனால் பாதிக்கப்பட்ட மக்கள் ஆயிரக்கணக்கில் முன்னர் அகதிகள் முகாம்களில் தங்கியிருந்தார்கள். முகாம்களில் போதிய இடவசதியின்மையாலும் சுகாதாரம் மருந்து வசதிகள் இன்மையாலும் அவர்களை நாமே உறவினர்கள் வீடுகளிலும் நண்பர்கள் வீடுகளிலும் தங்கும்படி கோரியுள்ளோம்.

கடந்தகால வன்செயல்களினால் அன்றாடம் தொழில் செய்துவந்த தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டதினால் அவர்களுக்கு 60 கட்டங்களுக்கு இலவச உணவு வழங்கப்படுமென முன்னர் அரசு அறிவித்திருந்தது. அந்த அறிவித்தலின்படி இதுவரை 16 கட்டங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்று அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலதிக அரச அதிபர் கூட்டிய மேற்படி மாநாட்டில் யாழ். மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர்கள் உட்பட வேறு பல அதிகாரிகளும் கலந்துகொண்டனர். [வி

## ஆனையிறவு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்த படையணி மதுறுஓயா பிரதேசத்தில் பயிற்சி பெற்ற படையணியாகும். இதேவேளை வெற்றிலைக்கேணியில் 'தந்திரோபாய' பிரிவு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அச்செய்தி குறிப்பிட்டுள்ளது. (153-சி)

## பிறப்பு அத்தாட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரத்துக்கு ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த காரணத்தினால் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று நண்பகல் வரை பொதுமக்கள் நீண்ட வரிசையில் நின்று விண்ணப்பப் பத்திரங்களைக் கையளித்தனர்.

ஒரு நாளில் மாத்திரம் சுமார் 430 விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (137)

## அரசின் முடிவுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வுக் கழகத்தினால் யாழ் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கடந்த ஓராண்டு காலத்திற்கு மேலாக நடந்துவரும் போர்ச் சூழ்நிலை காரணமாக இடம் பெயர்ந்து அகதிமுகாம்களில் வாழ்ந்துவரும் மக்களைப் போலவே, இடம் பெயர்ந்து வீடுகளில் வாழ்ந்து வரும் இடம் பெயராத மக்களும் சகல வழிகளிலும் கஷ்டத்தை எதிர்நோக்கி வாழுகின்றனர். தொழில் வாய்ப்புப் பாதிக்கப்பட்டும், பொருள்களைப் பெறமுடியாத நிலையிலும் இவர்கள் சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாகியுள்ளனர். இந்தச் சூழ்நிலையில் அகதி முகாம்களில் இல்லாதவர்களுக்கான நிவாரணத்தை நிறுத்துகின்ற அரசின் தீர்மானம், மனிதாபிமானம் அற்ற செய்கையாகும்.

இதுவரை வழங்கி முடிக்கப்படாத வாராந்த நிவாரணத்தை சகலருக்கும் வழங்கல், நாட்டில் சுமுகநிலை ஏற்படும் வரை தொடர்ந்தும் இந் நிவாரணத்தை சகலருக்கும் வழங்கல் போன்ற எமது கோரிக்கைகளுக்குச் சாதகமானதோர் முடிவு காணப்படாதவிடத்து பாதிக்கப்பட்ட தமிழ்மக்களின் வேதனையையும், எதிர்ப்புணர்வையும் வெளிக்காட்டும் நடவடிக்கைகளில் நாம் ஈடுபட வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோமென்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## வெற்றிலைக்கேணி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடற்பகுதியில் இறங்கியே முன்னேறிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றிலைக்கேணி கடற்படைத்தளத்திலிருந்தே ஆனையிறவு முகாமிற்குச் சகல விநியோகங்களும் மேற்கொள்ளப்படுவதாகவும் மேற்படி வானொலி தெரிவித்தது.

## இனப் பிரச்னைக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களில் மிகத் திறமையாகப் போர் புரிந்து வெற்றி பெறுவார்கள். குறிப்பாக ஆனையிறவுப் பகுதியில், வெட்டவெளியில் முப்படைகளுடன் அவர்கள் தீரத்துடன்போராடியது, அவர்களின் இராணுவப் பலத்தையும், திறமையையும் எடுத்துக்காட்டுவதாகவே உள்ளது.

புலிகளின் இந்த வளர்ச்சியினால் அரசாங்கம் பேச்சுவார்த்தைக்குப் புலிகளைத் தேடி வரவேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் இந்த அரசியல் அவதானிகள் எச்சரித்துள்ளனர். [வி]

## அடுத்த கட்ட

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் திட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன் களஞ்சியங்களில் இருந்து இம்மாதம் 2ம் கட்டமாக வழங்கப்படவுள்ள நிவாரணத்துக்கான பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கியுள்ளார்.

இந்த அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கோண்டாவில் களஞ்சியப் பொறுப்பாளருடன் தொடர்புகொண்டுதங்களுக்கு ஒதுக்கப்பட்ட அளவு உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அரிசி, மா, சீனி, பயறு, பருப்பு, பால்மா போன்ற பொருள்களுக்குத் திட்டப் பணிப்பாளர் அனுமதிப் பத்திரம் வழங்கியிருப்பதால், இந்தப் பொருள்கள் இம்மாத 2ம் கட்ட நிவாரணத்திற்கு வழங்கப்படும்.

'அ', 'இ' அட்டைகளுக்கு இலவசமாகவும், 'உ' அட்டைக்குப் பணத்திற்கும் நிவாரணம் வழங்கப்படும். [127]

## வடக்கு-கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த வருட கம்உதாவ கொண்டாட்டங்களை முன்னிட்டு மொனருகல மாவட்டத்தில் பல அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிப்பது தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் உரையாற்றும்போது பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்:

அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:-

யுத்தத்தினால் சின்னாபின்னப் பட்டிருக்கும் வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் சமாதானம் நிலவுமேயானால் இந்தப்பணத்தை நாட்டின் அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்த முடியும்.

இக்கருத்தரங்கில் உரையாற்றிய அமைச்சர் சிறிசேன கூரே, அமைதியின்மை பிரச்னைக்கு, அதை அடக்குவதன்மூலம் தீர்வு காண்டுவிடமுடியாதென்றும் அபிவிருத்தி நடவடிக்கை மூலமே தீர்வுகாண முடியுமென்றும் குறிப்பிட்டார்.

ராஜீவ் கொலை விவகாரம்:

# விசாரணைகள் பகிரங்கமாக நடத்தப்படும்

[புதுடில்லி]

முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பான வீசாரணைகள் பகிரங்கமாக நடத்தப்படவுள்ளன.

இக்கொலை தொடர்பாக விசாரணை நடத்திவரும் வர்மா கமிஷன், ரகசியமாக நடத்த வேண்டியவைகள் தவிர்ந்த ஏனைய விசாரணைகளை பகிரங்கமாகவே நடத்தவுள்ளதாக புதுடில்லியில்வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மறியல் போராட்ட கலந்துரையாடல்கள்

[யாழ்ப்பாணம்]

நிவாரணம் நிறுத்தம் செய்யும் அரசின் நடவடிக்கையை கண்டித்து இம்மாதம் 16ம் திகதி யாழ் செயலகத்தின் முன்னால் நடைபெறும் மறியல் போராட்டம் தொடர்பாக உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன.

இன்று செவ்வாய்க்கிழமை உடுவில் மருதனாமடம் இராமநாதன் கல்லூரியிலும் நல்லூர் பிரிவுக்கான கூட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் நடைபெறும்.

14ம் திகதி சங்கானை சைவப் பிரகாச வித்தியாசாலை, சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயம், சாவகச்சேரி இந்துக்கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆகிய இடங்களிலும் ஊர்காவற்றுறை பிரிவுக்கான கூட்டம் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்திலும் கரவெட்டி பிரிவு நெல்லியடி மகாவித்தியாலயம், மருதங்கேணி பிரிவு நாகர்கோவில் அ.த.க பாடசாலை, கோப்பாய் பிரிவு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும் இம்மாதம் 15-ம் திகதி வேலணை சரஸ்வதி வித்தியாசாலையிலும் கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன. (வி)

# இந்தியா - இஸ்ரேல் ராஜதந்திர உறவு

(புதுடில்லி)

இந்தியா இஸ்ரேலுடனான தனது ராஜதந்திர உறவுகளை மீண்டும் ஏற்படுத்திகொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்று இந்திய வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா இஸ்ரேலை அங்கீரித்துள்ளபோதும் பாலஸ்தீனியப் பிரதேசங்களை இஸ்ரேல் ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து அந்நாட்டுடனான ராஜதந்திர உறவுகளை துண்டித்துக் கொண்டது.

தற்போது ராஜாந்திர ரீதியில் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும் முயற்சியில் இரு நாடுகளும் ஈடுபட்டுள்ளன.

# மட்டுநகரில் விலைக்கட்டுப்பாட்டு பரிசோதகர்களுக்கு தட்டுப்பாடு

(மட்டக்களப்பு)

விலைமதிப்புத் திணைக்களத்தில் விலைக்கட்டுப்பாட்டு பரிசோதகர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் விலைக்கட்டுப்பாட்டை மீறும் வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்திணைக்களத்தில் எட்டு பரிசோதகர்கள் கடமையாற்றிய போது தற்சமயம் ஒரு ஊழியரே கடமை புரிவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் நிறுவை அளவைகளையும் முத்திரையிட்டு பரிசோதிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இக்கடமைக்கு பொறுப்பாக இருந்தவர் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னரே இறந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு விலைக்கட்டுப்பாட்டுத் தலைமை அலுவலகத்தினால் இன்றுவரை எவரும் இப்பரிசோதகர் பதவிக்கு நியமிக்கப்படவில்லை. (154]

## தமிழகத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவுக்கு வழங்குமாறு தமிழ்நாடு அரசு மத்திய அரசைக் கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மரண அறிவித்தல்

## திருமதி இரத்தினம் பாலசிங்கம்

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், வட்டக்கச்சி ஆறுமுகம் ரோட் 887ம் இலக்கத்தில் வசிப்பவருமாகிய திருமதி இரத்தினம் பாலசிங்கம் நேற்று காலமானார். அன்னார் திரு. பாலசிங்கத்தின் (விவசாயப் போதனாசிரியர், கிளிநொச்சி) அன்பு மனைவியும், திருமதி இரத்தினமாலா (பலாலி ஆசிரியர் கலாசாலை), திருமதி இரத்தினகலா (வட்டக்கச்சி தெற்கு அ.த.க. பாடசாலை), திருமதி இரத்தினலீலா, செல்வி நிர்மலா, செல்வி சசிகலா ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. பாஸ்கரன், திரு. சாந்தகுமார் ஆகியோரின் மாமியாரும், துசியந்தன், நிஷியந்தன், தினேசன், மயூரன், நிரோசன் ஆகியோரின் பேத்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 13-08-91ம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 1-00 மணிக்கு ஏழாலை மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
ரங்கநாதன்.
(தபால் அதிபர்)

மதி வீதி,
மல்லாகம்.

(சி-5107)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஆகஸ்ட் 13ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number D/[illegible]/81